உ

கடவுள் துணை.

பெரியபாளையம்

எல்லையம்மை பதிகம்.

சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களது

திருமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

23

கடவுள் துணை.

பெரியபாளயம்
எல்லையம்மன் பதிகம்.

விநாயகர் துதி.

வெண்பா.

அல்லவர்க்கும் நல்லவள்காணப்பெரியபாளையத்தா
ளெல்லம்மைமிசைப்பதிகமேற்றிடவே-நல்ல
பரமனுளமகிழும்பாலனெனுமைங்ரகனைக்
கரமெடுத்துயான் துதிப்பேன்யான்.

ஆசிரியவிருத்தம்.

ஆரணிப்பெரியபாளையமென்னுமாநகர மதில
மர்ந்திட்டயெல்ல, அம்மையிருதாள் துதித்தனுதின
முமேற்றிடும் அன்பரைக்கார்க்கவல்ல, வாரணிகொ
ங்கையுள் மாதுமாலுக்கிளையவளு மானசுந்தரியுநீ,
வந்ததரிக்கவருள் தந்தெனைரட்சிக்க வாதுனக்கேத
ம்மணி, நாரணிகலையூர்தி நீலியந்தரிகௌரி யமிர்த
குணமிகுதுபாஷணி, நாடியுனைதேடியொருகோடிச

ரணஞ்செய்து நத்துமெனையாளந்தரீ, காரணிதன்னி லேவனப்புரிசதாவரசன் தனையன்திருவேங்கடனைநீ தர்க்காத்துரட்சிக்க வரவேண்டுமிப்போது தருண மெனையாள்சுந்தரீ. 1

தாயதுவயிற்றிற் பிறந்துயான்மண்மீது தருமம துசெய்தறிகிலேன், தஞ்சமென்றவர்தம்மை அஞ் சவேண்டாமென்று தைரியமுரைக்கவறியேன், நே யமுடனனுதினமு மின்னடிமையாமன்பர் நேயமது செய்தறிகிலேன், நெஞ்சமதுயிளகவுன் கஞ்சமலர டிதொழும் நேசர்க்குகந்தவுந்தன், சேயனுன்றிருவ டிக் கன்பனென்றேற்றுமிச் சேதியைக்கேட்டலர்ந் து; சித்தமதிலுற்றகுறை பற்றறுத்திட்டுயிச்சிறுவ ன்திருவேங்கடனையாள், ஆபனிடதங்கையேபரமனி டமங்கையே ஐங்கரனையீன்றவுமையே, அவனிதனி ற்பெரிய பாளயமென்னுமாநகரமதில்மேவு மெல்லம் மையே. 2

பெற்றதாய்தந்தையும் பெண்டுபிள்ளையுமக்கள்பி ரியமுளசுற்றங்களோர், பேதமில்லாமலேயாதரித்தி ட்டுயென் பின்துடர்ந்தினிவருவரோ, விற்றமதை பற்றியெனை நற்றுமிச்சுற்றமிதை வைத்திருந்தெ ன்னபலனை, பெற்றிடுவதைச்சொல்லுமத்திமுகனை

ப்பெற்ற வுத்தமியுமானகுமரி, நித்தமுனைசித்தமிது நற்றவருள்புரிகுவாய்நிர்மலாநந்தரூபி, நீலிதிரிசூலிப ரிபாலியென்றுனையேற்றும் நேயன்திருவேங்கடனை யாள், அற்றனிடமங்கையே சத்தியெனுநங்கையே அன்பர்க்குகந்தவுமையே, அவனிதனிற்பெரிய பா ளையமென்னுமாநகரமதில்மேவு மெல்லம்மையே. 3

திங்களொளிபோன்றதிரு மங்கைமணவாளன்சி றுதங்கையேயானுந் தனைத்தேடிமனம் நாடியொரு கோடிசரணஞ்செய்து திரியுமெனைரட்சித்திடும், சங் கரனங்கமதிற் பங்குபெருமங்கையெனுந் தங்கநிர மானவடிவே, சாமுண்டிமாதரி கௌரிமுக்கண்ணி யிது சமயமென்றனைநம்பியான், பொங்கமுடனுன திரு தங்கமலரடிதொழும் புனிதன் திருவேங்கடன் சதா,புண்டரீகாட்சனிடதொண்டனென்றேபுகலும் புவனமதிற்சக்கிராயுதி, அங்கமதிலாபரண மெங்கு நிறைகொண்டசிறு வைங்கரனையீன்றவுமையே, அ வனிதனிற் பெரியபா ளையமென்னுமாநகரமதில் மேவுமெல்லம்மையே. 4

ஆடிமாதத்திலைந் தாதிவாரமுமுந்த னடிபணிந் தேற்றுமன்பர், அமிதமாயேகுவோ ருன்கோவிலைச்

சுற்றி அன்னையுனைக்காணாமலே, தேடியிருபதமதை
நரடி மலர்சூடுவோர் தேவிநின்பிரார்த்தனை தமைத்,
தீர்த்துமெய்வேர்த்து பார்த்துகைகோர்த்துவுன் தி
ருவடித் தொழுமன்பரோ, கோடியோயின்னமிரு
கோடியேயிவளவென குறிப்பிடவசந்தனிந்த, கோ
தாட்டொழித்ததிருவேங்கடனையாட்கொண்டகோ
விந்தனிடதங்கையே, ஆடியபதந்தரு மத்தனிடமங்
கையே யமரர்தொழுதேத்துமுமையே, அவனிதனி
ற்பெரியபாளயமென்னுமாநகர மதில்மேவுமெல்லம்
மையே. 5

மலையரையன்மகளான மாதுனக் கடுமையான்
மண்மிசையிருக்குமளவும், மனமொற்றுநினைவற்று
நிலைவுற்றுயெனைபெற்றதாயென்று மனமதுயிருந்து
மிந்தகலைமுற்றுமறியாத சிறுவனுரைசெய்திடுங் கவி
யுமுன்செவிபுகாதோ, காய்சினமிலாமலென் தாய்
போலவேயென்னை கார்க்காமலின்றுவேடன், வலை
தன்னிலேசிக்கி உழல்கின்றமான்போலவாக்கினாயன்
றுபிரமன், தலை தன்னிலேபோட்டபுள்ளியதுதப்பா
துதனையன்திருவேங்கடனையாள், அலைகொண்டநதி
யும் வெண் மதியுமறுவும்புனையு மாகிசங்கரன்மங்
கையே, அவனிதனிற்பெரியபாளையமென்னுமாநகர
மதில் மேவுமெல்லம்மையே. 6

இருதயமதையறிவதரிது ஈசனிடப்பாகமதுகொண்டகௌமாரிநீ யெனறேத்துமிச்சகமெலா, முடையவுமையவளும்நீ விடைதரும்பிரதாபி வும்பரேற்றிடுமம்பிநீ உருவமதுகொண்டனின் றிருவடிக்கன்பனென்றுதவுமுன்நருணையென்னுங், கடைதிறந்திடிலென்தன்கொடியபிணிநிற்குமோ கண்ணலர்ந்திட்டவுன்னை, கண்டுதுயர்விண்டுகளி கொண்டுவுன்னடிதொழக்கருதுந்திருவேங்கடனையாள், அடைக்கலமெனைப்புகுந்தலேகின்றயென்னைநீ ஆட்கொள்வதரிதேனினி, அவனிதனிற்பெரியபாளையமென்னுமாநகரமதில்மேவுமெல்லம்மையே. 7

வண்டுமொய்த்திடுமலர்க்கொண்டுநின்திருவடிக்கண்டுளமகிழ்ந்துநிற்கும், வாஞ்சையையறிந்துதன்வர்மமதுரைத்திடும்வரிதரிதுயானுனக்கு, தொண்டுசெய்பவனென்று அண்டர்முனிவோரறிவர் தொல்லுலகனைத்துமறியும், தோகையேயுனையன்றிமுன்னமெனையாட்கொண்ட தோன்றலொருவனுமுண்டுகேள், தண்டுழாய்மார்பனையு மண்டுவேனொருவேளை தர்ப்பரியவனுனக்கு, தமயனெனுமுறைமையாலிருவரையுமேற்றமிற் றனையன்திருவேங்கடனையாள,

அண்டுமவர்தம்மையேயாட்கொண்டசிவகங்கையே
அன்பர்க்கிரங்கு முமையே, அவனிதனிற்பெரியபா
ளையமென்னுமாநகரமதில்மேவுமெல்லம்மையே. 8

மண்டைக்குடைச்சல்வயர்நோவு மாமலைமுதல்மா
ருதவல்வினைகளைக்கொண்டுநின் திருவடித்தாள் துதி
த்தற்றுமவர் கொடுப்பிணியகற்றவப்பூ, மண்டலந்
தன்னிலே கண்கண்டதெய்வம்நீ மற்றுமொருதெய்
வமுண்டோ, மறைகற்றகுறையற்ற நிறைபெற்றதி
ருமேவு மார்பனிடதங்கையேயுன், தொண்டனைப்பூ
ர்வவினை யண்டிவாடிடுமிந்த துயரகற்றியயின்றுநீ,
துரிதமாய்வரவேண்டும் சிறுவன்திருவேங்கடன் து
யர்கண்டயீஸ்வரியும்நீ, அண்ட பகிரண்டமெண்டி
சையுமேற்றிடுமந்த ஆதிசிவனிடமங்கையே, அவனி
தனிற்பெரியபாளய மென்னுமாநகரமதில்மேவுமெல்
லம்மையே. 9

கற்பினுக்கரசிநீ சொற்பெருங்கோதைநீ கருணை
கூர்ந்தாள்பவளும்நீ, காய்சினமிலாளும்நீ கண்க
ண்டதெய்வம்நீ கணபதியையீன்றவளும்நீ, பொற்பு
ள்ளமாதுநீ போதனைக்காரிநீ புன்னகைக்கொள்பவ
ளுநீ, போர்புரியும்சத்திநீ ஆர்ப்பரித்திடுவைநீ பொங்
கமுடன் வாழ்பவளும்நீ, வொப்பரசன்புதல்விநீ

கர்ப்பனைக்காரிநீவே தனையீன்றமால்தங்கைநீ வெற்றி பெருங்கௌரிநீ சத்தியேயிவ்வேளை வெளியன்றிரு ருவேங்கடனையாள்; அறப்பெருங்கோதைமலர் மங் கைமணவாளனே டன்றுதித்திட்டவுமையே, அவ னிதனிற்பெரியபாளையமென்னுமாநகர மதில்மேவு மெல்லம்மையே.

பூமாலைகொண்டுந்தன் தோண்மீதிலே சாற்றபொ ருள்கையிலில்லாமலோர், பாமாலையாம்பதிகம்பதி னென்றுஆசிரிய பண்ணதனையானியற்றி, சீமாட்டி யேயுந்தன் செய்வடிமிசேய்சாற்றும் சேயனையாட் கொண்டுநின், சித்தமதில்மெத்ததயை வைத்துயெ னைரட்சிக்க சீக்கிரங்கருணைபெருகி, வாமாட்சிகா யாட்சி மீனாட்சிநீயோடி வரவேண்டுமிச்சமயமென், வந்தனங்கை கொண்டு இந்ததிருவேங்கடனைவாழ் த்தநர்ச்சமயமருள்தர, யாமினிதனக்குநிகர் கந்தரத் திறைவனிடமன்புபெற்றோங்குமுமையே, யவனித னிற்பெரியபாளயமென்னுமாநகர மதில்மேவுமெல் லம்மையே. 11

எல்லையம்மைபதிகம்

முற்றிற்று.

——